நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 12.02.2026 . மலர் 04 . இதழ் 42. வியாழக்கிழமை . NAGERCOIL EDITION . 12.02.2026 . VOL 04 . ISSUE 42. THURSDAY . 4 PAGES . Rs. 5

## ஆட்சியில் பங்கு இல்லை... ஸ்டாலின் திட்டவட்டம்

# உடைகிறது திமுக கூட்டணி?

சென்னை, பிப்.12-

ஆட்சியில் பங்கு தர முடியாது என திமுக தலைவரும், தமிழக முதல்வருமான ஸ்டாலின் திட்டவட்டமாக கூறி உள்ள நிலையில் கூட்டணியை முறிக்கும் விதத்தில் அக்கட்சி எம்பியான மாணிக்கம் தாகூர் பேசியிருப்பது அனலை கிளப்பி உள்ளது.

விஜய் அரசியலுக்கு வந்தது தமிழகத்தில் பல்வேறு கட்சிகளுக்கும் அனுகூலமாகிவிட்டது. டிடிவி தினகரன், அன்புமணி தொடங்கி கிருஷ்ணசாமி வரை தவெகவை வைத்து கேம் ஆடிய நிலையில், காங்கிரஸும் விஜய்யை வைத்து திமுகவுக்கு தண்ணி காட்டிக் கொண்டிருக்கிறது.

கடந்த சில வாரங்களாகவே காங்கிரஸில் கலகக் குரல்கள் அதிகமாகியிருக்கிறது. 'ஆட்சியில் பங்கு வேண்டும், அதிகம் தொகுதிகள் வேண்டும்' என்பதை அழுத்தமாக சொல்லி வருகின்றனர் பிரவீன் சக்கரவர்த்தி, மாணிக்கம் தாகூர், ஜோதிமணி உள்ளிட்டோர். இவர்களின் கோரிக்கைக்கு வலு சேர்ப்பதுபோல டெல்லி தலைமையும் பெரிதாக கண்டிக்காமல் அப்படியே விட்டுவிட்டது.

2006-ல் 34 தொகுதிகளில் வென்று, 96 தொகுதிகளில் மட்டுமே வென்றிருந்த திமுகவுக்கு ஆட்சியில் பங்கு கோராமலேயே பரிபூரண ஆதரவளித்தது காங்கிரஸ். 2011 சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு 63 தொகுதிகள் திமுக கூட்டணியில் ஒதுக்கப்பட்டது. அதன் பின்னர் 2016-ல் காங்கிரஸுக்கு 41 தொகுதிகள் மட்டுமே கொடுத்தது திமுக.

2021 சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸுக்கான கோட்டாவை இன்னும் குறைத்து 25 ஆக்கியது. 2026 தேர்தலில் காங்கிரஸுக்கான தொகுதிகள் இன்னும் குறைக்கப்படலாம் என்று அரசல் புரசலாக பேசப்பட்டது. இதனை மனதில் வைத்தே காங்கிரஸ் சார்பில் அமைக்கப்பட்ட குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை தவிர்த்து வந்தது திமுக.

தங்களுக்கான தொகுதிகள் குறைக்கப்படலாம் என்பதை யூகித்த காங்கிரஸ், அடுத்த ஆப்ஷனாக தவெகவை கையில் எடுத்தது. மிகக் குறைவான தொகுதிகளை திமுக



ஒதுக்கினால், தவெக பக்கம் செல்வோம். வெற்றிபெறவில்லை என்றாலும், கட்சியை உயிர்ப்பிப்போம். விஜய்யின் செல்வாக்கை வைத்து தேர்தல் நடைபெறவுள்ள புதுச்சேரி, கேரளாவில் வெற்றி பெறுவோம் என்றெல்லாம் கணக்குப் போட்டது.

இந்தக் கணக்கின் வெளிப்பாடாகவே ஆட்சியில் பங்கு என்ற முழக்கத்தை முன்வைக்க ஆரம்பித்தது காங்கிரஸ். திமுக கூட்டணிக்கு ஆதரவாக ஒரு சாரரும், தவெக கூட்டணிக்கு ஆதரவாக ஒரு சாரரும் என களத்தில் தீவிரமாக பேசி வருகின்றனர். தவெக தரப்பிலும், '70 தொகுதிகள், துணை முதல்வர் பதவி, ஆட்சியில் பங்கு' என்றெல்லாம் காங்கிரஸுக்கு தூண்டில் போடப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, திமுகவுடன் கூட்டணி குறித்து பேச 70 நாட்களுக்கும் மேலாக காத்திருக்கிறோம் என வெளிப்படையாகவே சொல்லி அதிர்ச்சியூட்டினார் காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர். இதனை தொடர்ந்து பிப்.22 முதல் கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தை தொடங்குவோம் என திமுக அறிவித்துள்ளது.

இந்தச் சூழலில்தான் தமிழகத்தில் கூட்டணி ஆட்சி என்பதெல்லாம் ஒத்துவராது என்று உறுதியாக சொல்லியுள்ளார் திமுக தலைவர் ஸ்டாலின். ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பேசிய அவர், "திமுக கூட்டணியில் குழப்பம் என திட்டமிட்டு பரப்பப்படுகிறது. திமுக - காங்கிரஸ் கூட்டணி இடையே எந்த குழப்பமும் இல்லை. திமுக, காங்கிரஸ் கூட்டணி இணக்கமாக இருக்கிறது. ஆட்சியில் பங்கு என்பது தமிழ்நாட்டுக்கு ஒத்துவராது. கூட்டணியில் முறிவு ஏற்படுவதற்காக ஆட்சியில் பங்கு என கிளப்பி விட்டு, சிலர் சதி செயலில் ஈடுபட்டுள்ளனர். அது எடுபடாது.

ஆட்சியில் பங்கு என்பது தமிழ்நாட்டுக்கு ஒத்துவராது என்பது காங்கிரஸுக்கு நன்றாக தெரியும். அரசியலை தாண்டி ராகுல் காந்தியை ஒரு சகோதரராக பார்க்கிறேன். அவரும் அப்படித்தான். திமுக கூட்டணியில் காங்கிரஸ் தொடர்ந்து இருக்கும்" என பொட்டில் அடித்தாற்போல சொல்லியுள்ளார்.

## வெளியேறும் திட்டத்தோடு தொடர்ந்து சீண்டிப்பார்க்கும் மாணிக்கம் தாகூர்!!

இதற்கு உடனடியாக பதிலளித்த காங்கிரஸின் பிரவீன் சக்கரவர்த்தி, "இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் கூட்டணி அரசை ஏற்கும் நிலையில், தமிழ்நாடு மட்டும் ஏன் ஏற்காது? இந்தியாவில் மற்ற மாநில மக்களை போல் தமிழ்நாட்டு மக்களும் கூட்டணி ஆட்சிக்கு ஆதரவாகவே உள்ளனர். கூட்டணி ஆட்சி அமைவதில் தமிழக மக்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை' எனத் தெரிவித்தார்.

இவரின் கருத்தை ஆமோதித்த காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர், 'மக்கள் முடிவு செய்வார்கள் கூட்டணி ஆட்சியா அல்லது ஒரு கட்சி ஆட்சியா என்பதை. 2006-ல் மக்கள் தீர்பை செயல்படுத்தாதது காங்கிரஸ் கட்சியின் தவறு' எனத் தெரிவித்தார்.

மாணிக்கம் தாகூர் பேச்சைப்பார்த்தால் திமுக கூட்டணியிலிருந்து எப்படியும் காங்கிரசை வெளியேற்றி, தவெகவுடன் போய் விட வேண்டும் முடிவு செய்திருப்பது வெளிப்படையாகவே தெரிகிறது. தவெகவுடன் சேர்ந்து தோற்றாலும் பரவாயில்லை. இனி திமுகவுடன் கூட்டணி வேண்டாம் என்று முடிவு செய்திருப்பதாகவே தெரிகிறது. சட்டசபை தேர்தலை விடுங்கள். தமிழக மக்களின் முடிவு எப்போதுமே மூன்றாவது அணிக்கு சாதகமாக இருந்ததில்லை.

விஜய் எத்தனை கட்சிகளை சேர்த்து வந்தாலும் அது தமிழக தேர்தல் களத்தில், திமுக, அதிமுகவுக்கு அடுத்து மூன்றாவது அணிதான். காங்கிரஸ் வெளியேறினால் திமுகவுக்கு சிறிய அளவு சேதாரம் ஏற்படும் என்பது உண்மைதான். அதையெல்லாம் தேமுதிகவை வைத்து திமுக சரிக்கட்டி விடும். ஆனால் காங்கிரசின் எதிர்காலத்தை நினைத்துப்பாருங்கள். சட்டசபை தேர்தலில் திமுக கூட்டணியிலிருந்து வெளியேறினால், அடுத்து வரும் பாராளுமன்ற தேர்தலில் திமுக பக்கம் தலைவைத்துக்கூட படுக்க முடியாது. சட்டசபை தேர்தலில் தேறாமல் போனால் பாராளுமன்ற தேர்தலில் அந்தக்கட்சியின் நிலைமையை சொல்லவே வேண்டாம். பாராளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் காங்கிரஸ் வெற்றி பெற முடியாமல் போனால் ஒட்டுமொத்த தென் மாநிலங்களிலும் காங்கிரஸ் தேற முடியாமல் போகலாம். ஏற்கனவே வடமாநிலங்களில் தேய்ந்து வரும் காங்கிரசுக்கு தென் மாநிலங்களிலும், குறிப்பாக தமிழகத்திலும் அக்கட்சி நிர்வாகிகளே ஒரு வழி பண்ணாமல் ஓய மாட்டார்கள் போலிருக்கிறது.

# ஆட்டத்தை தொடங்கிய சசிகலா : கட்சியும் ரெடி



## தேர்தல் நிலவரத்தை விவரிக்கிறார் மூத்த பத்திரிகையாளரும், அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனருமான முத்துக்குமார்

நாகர்கோவில், பிப்ரவரி. 12-

ஜெயலலிதாவின் உற்ற தோழியாகவும், நிழலாகவும் இருந்து வந்த சசிகலா, சொத்து குவிப்பு வழக்கில் சிறைக்கு சென்று வந்த பிறகு, அரசியலிருந்து ஒதுங்கியே இருந்து வந்தார். அதிமுக வுடன் இணைய ஆசைப்பட்டாலும், எடப்பாடி பழனிசாமியால் நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில் 2026 தேர்தலில் தனது பலத்தை காட்ட வேண்டும் என்று சசிகலா விரும்புகிறார். எனவே சில மாதங்களாகவே தொடர்ந்து தனது ஆதரவாளர்களை சந்தித்து வருகிறார். இதனால் அமமுக தலைவர் தினகரனுக்கும், சசிகலாவுக்குமிடையே பிரச்சினைகளும் எழும்பியது. இந்நிலையில் தினகரனோ சொல்லிக் கொள்ளலாமல் ஓடோடி சென்று தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்து விட்டார். இது சசிகலாவிற்கு மேலும் ஆத்திரத்தை கொடுத்துள்ளது.

தற்போது பலத்த ஆலோசனைக்கு பிறகு தினகரன் போனால் என்ன? எனது தனிப்பட்ட செல்வாக்கு என்ன என்பதை காட்ட வேண்டும் என்கிற முயற்சியில் சசிகலா இறங்கியிருப்பதாக தெரிகிறது.

அதிமுகவுக்கு பக்க பலமாக இருக்கும் முக்குலத்தோர் வாக்குகள் என்னால் தான் வந்தது. எனவே முக்குலத்தோர் தொகுதிக்கு சென்று நான் பிரச்சாரத்தில் ஈடுபட்டால் யாரை வேண்டுமானாலும் என்னால் ஜெயிக்க வைக்க முடியும் என்று சசிகலா நம்புகிறார். அதற்காக தனது சகோதரர் திவாகரனிடம் கைவசம் இருக்கிற அண்ணா திராவிடர் கழகத்தை தனது தலைமையில் இயங்குவதற்கான வேலைகளை முடுக்கி விட்டுள்ளார்.

இந்நிலையில் அண்ணா திராவிடர் கழகத்தின் இளைஞரணி செயலாளராக இருக்கும் ஜெய்ஆனந்த், தவெக தலைவர் விஜயை சந்தித்து தேர்தல் கூட்டணி குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிகிறது. 25 தொகுதிகள் வரையிலும் கேட்டதாகவும் தெரிகிறது.

ஆனால் சசிகலா இதற்கு சம்மதம் தெரிவிப்பாரா? என்றால் அது சந்தேகம் தான் என்று சொல்லுகிறார்கள் சசிகலாவின் ஆதரவாளர்கள். எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் சின்னம்மாவை அதிமுகவில் சேர்க்காமல் போனாலும், என்.டி.ஏ கூட்டணி சின்னம்மாவை கைவிடாது. அண்ணா திராவிடர் கழகத்தின் சார்பில் தேசிய முற்போக்கு கூட்டணியில் சின்னம்மாவுக்கு 3 லிருந்து 5 தொகுதிகள் கண்டிப்பாக கிடைக்கும். தென்மாவட்டங்களில் சின்னம்மாவுக்கு ஆதரவு உள்ள தொகுதிகளை தேர்ந்தெடுத்து போட்டியிட வாய்ப்பு உள்ளதாகவும் சசிகலாவின் ஆதரவாளர்கள் கூறுவதை கேட்க முடிகிறது.

தேசிய முற்போக்கு கூட்டணி நிராகரிக்கும் பட்சத்தில், ஜெயலலிதாவின் பிறந்தநாளுக்கு பிறகு, தனது செல்வாக்கை அதிக படுத்தி தவெக பக்கம் செல்லலாம் என்றும் அரசியல் கருத்தாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

## சங்கரன்கோவிலில தமிழ்நாடு தலை குனியாது கலந்தாய்வு கூட்டம்
## திமுக டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏகே எஸ் விஜயன், ராஜா எம்எல்ஏ பங்கேற்பு




சங்கரன்கோவில். பிப்.12-

தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் தலைமை கழகத்தின் அறிவுறுத்தலின்படி சங்கரன்கோவிலில் அமைந்துள்ள சீதாலட்சுமி மகாலில் வைத்து தமிழ்நாடு தலைகுனியாது என்ற தலைப்பில் பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் கலந்தாய்வு கூட்டம் நடந்தது. தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமை வகித்தார். சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ராமஜெயம் முன்னிலை வகித்தார். இதில் திமுக மாநில விவசாய அணி செயலாளர் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏகேஎஸ் விஜயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு அனைத்து தரப்பினரிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

கருத்து கேட்பது கூட்டத்தில் பெறப்பட்ட அனைத்து மனுக்களும் உடனடியாக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார் தொடர்ந்து கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் விசைத்தறி உரிமையாளர்கள் சங்கம் ,தொழிலாளர்கள் சங்கம், விவசாயிகள் சங்கம், விஸ்வகர்மா சமுதாய சங்கம், வர்த்தக சங்கம், ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கம், முடிதிருத்துவோர் நல சங்கம், சலவை தொழிலாளர்கள் சங்கம், முன்னாள் அரசு ஊழியர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளை சார்ந்தவர்கள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

அப்பொழுது விசைத்தறி தொழிலாளர்கள் சங்கம் சார்பில் கடந்த தேர்தலின் போது தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலினிடம் கொடுத்த 7 கோரிக்கைகளில் 6 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும், விசைத்தறி தொழிலாளர்களுக்கு 500 யூனிட் இலவச மின்சாரம் வழங்கி முதன் முதலில் நெசவாளிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாத்தவர் முன்னாள் முதல்வர் கலைஞர் எனவும்,அதனைத் தொடர்ந்து அதிமுக ஆட்சியில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 500 யூனிட்டை 750 யூனிட்டாக ஆக மாற்றி வழங்கினார் தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அதனை 1000 யூனிட்டாக தற்போது வழங்கி வருகிறார் விசைத்தறி தொழிலுக்கு மிகவும் உதவியாக உள்ளது

தமிழ்நாட்டில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்று முனைப்புடன் அனைத்து தரப்பினர் அளித்துள்ள கோரிக்கைகளை முதல்வர் கவனத்திற்கு கொண்டு சென்று அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ,கே,எஸ், விஜயன் மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ தமிழக அரசின் சாதனைகளை விளக்கி பேசினார்கள்




## ஈரோடு கலைக்கல்லூரியில் பார்வையாளர்களை அசத்திய பேஷன் ஷோ - மாணவர்கள் அசத்தல்

ஈரோடு, பிப். 12-

ஈரோடு கொங்கு கலை அறிவியல்கல்லூரியில் ஆடை வடிவமைப்பு மற்றும் கவின் புனைவியல்துறைசார்பாக பேஷன்காலா- 2026 நடைபெற்றது. இந்நிகழ்வில் துறையின் இணைப்பேராசிரியரும் துறைத் தலைவருமான முனைவர் மஞ்சுளா வரவேற்புரை ஆற்றினார். கல்லூரியின் தாளாளர் சச்சிதானந்தன் தலைமை தாங்கினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் வாசுதேவன் வாழ்த்துரை வழங்கினார்.

இந்நிகழ்விற்கு நடுவர்களாக தமிழ்த்திரைப்படத்துறையில் ஆடைவடிவமைப்பு நிபுணராக பணியாற்றிக்கொண்டிருக்கும் ஜோஸ்வாமேக்ஸ் வெல், சென்னை ஜாரா நிறுவனத்தின் விஷுவல் மெர்ஷன் டிசர் பாரதி, ஈரோடு பஷ்டின் பேபிக் லோத்திங் உரிமையாளர் கோமதி ஸ்ரீகல்யாண் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் ஆடை வடிவமைப்புத்துறை மாணவர்கள் இயற்கை வண்ணங்களைக் கொண்டு, எளிதில் மக்கிப்போகும் தன்மையிலான உடைகளை அணிந்து கொண்டு ஒய்யாரமாக நடந்தனர். இது பார்வையாளர்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது.

ஆடை வடிவமைத்த மாணவர்களுக்கு பெஸ்ட்டி சைனர், பெஸ்ட் கிரியேட்டி விட்டி, பெஸ்ட்ஸ் டைலிஸ்ட் என்ற அடிப்படையில் பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் ஆடை வடிவமைப்புத் துறைப் பேராசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர். இறுதியாக ஆடைவடிவமைப்பு மற்றும் கவின்புனைவியல்துறை உதவிபேராசிரியர் கோமதி நன்றிகூறினார்.





ராமேஸ்வரம் ராமநாதசுவாமி திருக்கோவிலில் மாசி மஹா சிவராத்திரி திருவிழாவை முன்னிட்டு முதலாம் நாளில் சுவாமி தங்க நந்திகேசுவரர் வாகனத்திலும் அம்பாள் வெள்ளி அன்ன வாகனத்திலும் இரண்டாம் நாள் திருவிழாவில் சுவாமி வெள்ளி கற்பக விருட்ச வாகனத்தில் அம்பாள் தங்க காமதேனு வாகனத்திலும் நான்குரத வீதியில் உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

## அருள்மிகு சங்கர நாராயணர் திருக்கோவிலில் 70 வயது மூத்த தம்பதியினருக்கு சிறப்பு ராஜா எம்எல்ஏ பங்கேற்பு



சங்கரன்கோவில், பிப்.12–

தமிழக சட்டப்பேரவையில் கடந்த வருடம் திருக்கோயில்களில் மூத்த தம்பதியினருக்கு சிறப்பு செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சிறப்பு செய்யும் நிகழ்ச்சியை கடந்த வருடம் நவம்பர் மாதம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார் அதன் தொடர்ச்சியாக சென்னை வேப்பேரியில் முதலமைச்சர் மு க ஸ்டாலின் மூத்த தம்பதியினருக்கு சிறப்பு செய்யும் நிகழ்ச்சியை சேலை வேஷ்டி குங்குமம் வளையல் குங்குமச்சிமிழ் உள்பட பல்வேறு பொருட்களை வழங்கி சிறப்பு செய்தார் அவ்வகையில் சங்கரன்கோவிலில் உலக பிரசித்தி பெற்ற சங்கரநாராயணர் சுவாமி கோவிலில் வைத்து 26 மூத்த தம்பதிகளுக்கு சிறப்பு செய்யும் நிகழ்ச்சி நடந்தது. இதில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு மூத்த தம்பதிகளுக்கு சிறப்பு செய்தார்.நிகழ்ச்சியில் திமுக மூத்த உறுப்பினர் சங்கரதாஸ், நகராட்சி சேர்மன் கௌசல்யா வெங்கடேஷ், கோயில் துணை ஆணையர் சுரேஷ், திமுக நகர செயலாளர் பிரகாஷ், கோயில் கண்காணிப்பாளர் சரவணபவன், பொறியாளர் முத்துராஜ், ஆய்வாளர் ராஜகோபால், திமுக மாணவரணி வெங்கடேஷ், ஐடி விங்க் சிவசங்கரநாராயணன், கவுன்சிலர் புஷ்பம், இளைஞரணி ஜான்சன்,ஜெயக்குமார், பாலாஜி, பாரதிராஜா மற்றும் மூத்த தம்பதிகள், கோயில் பணியாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



வேலூர் மாநகராட்சி காந்தி நகர் கன்சால்பேட்டை ஸ்ரீ சக்தி மாரியம்மன் ஆலய முதலாம் ஆண்டு கும்பாபிஷேக விழாவில் யாகசாலை பூஜை நடைபெற்றது. பூஜையில் ஊர் நாட்டாமை விழா பொறுப்பாளர் சிவாஜி கோயில் நிர்வாகி மணிகண்டன் துணை நாட்டாமை வெங்கட்ராமன் செயலாளர் பாஸ்கர் பொருளாளர் சத்திய சண்முகம் சட்ட ஆலோசகர் லோகேந்திரன் ஆகியோர் உள்ளனர்

## கம்மா குளோபல் பெடரேஷன் அமைப்பின் சார்பாக கம்மா சமூக மாநாடு!



சென்னை, பிப்.12–


கம்மா அமைப்பை வலுப்படுத்துதல், மண்டலக் கிளைகளின் தொடர்ச்சியான சமூக மக்களை ஒன்றிணைக்க, அவர்களின் கலாச்சார உறவுகளைப் பலப்படுத்த கம்மா குளோபல் பெடரேஷன் மாநாடு சேந்தமங்கலம் ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்றது. தங்களது சமூக மக்களை ஒன்றிணைக்கவும், கலாச்சார உறவுகளை பலப்படுத்தவும் கம்மா குளோபல் பெடரேஷன் தமிழ்நாடு மற்றும் பல்வேறு மாநிலங்களில் இருந்து பிரதிநிதிகளும் சிறப்பு விருந்தினர்களாக திரைப்பட இயக்குநர் கே.பாக்யராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் கு.செல்வப்பெருந்தகை, எம்.கே.மோகன், ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். மாநாட்டில் கம்மா குளோபல் பெடரேஷன் நிறுவனத் தலைவர் ஜெட்டி குசும குமார் பேசுகையில், கடந்த 2024–ல் இந்த பெடரேஷன் துவங்கப்பட்ட பிறகு, இந்த சமூக மக்கள் பங்கேற்ற மிகப் பிரமாண்ட கூட்டங்களில் இதுவும் ஒன்றாகும். தற்போது, இந்த அமைப்பு உலகளவில் சுமார் 2.1 கோடி மக்களை முன்னிலைப்படுத்தி வருகிறது. இது இந்திய மக்கள் தொகையில் சுமார் 1.5 சதவீதமாகும். தமிழ்நாட்டில் சுமார் 65 லட்சம் கம்மா சமூக மக்கள் வாழ்வதாகக் கருதப்படுகிறது . இவர்களை அரசியல் படுத்துவதே முதல் குறிக்கோளாகும். தமிழ்நாடு சட்டமன்றத்தில் உள்ள பல்வேறு கட்சிகளில் குறைந்தது 30 கம்மா எம்.எல்.ஏ–க்களையாவது வெற்றிபெறச் செய்வதும், நீண்ட கால அடிப்படையில் எதிர்கால அரசுகளில் துணை முதல்வர் பதவியை பெறுவதும் இந்த மாநாட்டின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் என்று தெரிவித்தார்.



மதுரை கிருஷ்ணாபுரம் காலனி பகுதியில் உள்ள ரோஸிபெர்ல் மருத்துவமனையில் மக்கள் நலனுக்காக இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் ஆஸ்துமா இளைப்பு பாத நரம்பு கல்லீரல் சம்பந்தமான நோய்களுக்கு துல்லியமான கருவிகளைக்கொண்டு மருத்துவர் சந்திரன் நோயாளிகளுக்கு பரிசோதனைகளை செய்து ஆலோசனை வழங்கினார். மேலும் நோயாளிகளுக்கு தேவையான நுரையீரல் அதாவது ஸ்பைரோமீட்டர் மூலம் பரிசோதனை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் கிருஷ்ணாபுரம் காலனி உட்பட சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை மருத்துவமனை நிர்வாக அதிகாரி கருப்பசாமி செய்திருந்தார்

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

## முத்து வயல் ஊராட்சி வடக்கு தெரு ஸ்ரீ தர்ம முனீஸ்வரர் கோயில் மகா கும்பாபிஷேக விழா



ராமநாதபுரம், பிப்.12–

ராமநாதபுரம் மாவட்டம் போகலூர் ஒன்றியம் முத்துவயல் ஊராட்சியில் வடக்கு தெருவில் அமைந்து உள்ள ஸ்ரீ தர்ம முனீஸ்வரர் கோயில் மகா கும்பாபிஷேகம் 50 ஆண்டுகள் பின்பு வெகு விமர்சையாக நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு கணபதி ஹோமம் மற்றும் யாகசாலை பூஜை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து விழா முக்கியஸ்தர்கள் காப்பு கட்டி விரதம் இருந்தவர்கள் புனித நீர் குடங்களை சுமந்து கடம் புறப்பாடு நடைபெற்றது. காலை 9.45 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் கோபுர கலசங்களில் வேத விற்ப்பன்னர்கள் வேதங்கள் முழங்க வானத்தில் கருடன் வட்டம் இட கோபுர கலசத்தின் மீது புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் பக்தர்களின் கரகோஷம் மற்றும் பெண்கள் குலவை சத்தத்தின் நடுவே வெகு விமர்சையாக நடைபெற்றது. தொடர்ந்து கோபுர கலசங்களுக்கு தீப ஆராதனையும் அதனைத் தொடர்ந்து சர்வ அலங்காரத்தில் அருள் பாலித்த ஸ்ரீ தர்ம முனிஸ்வரர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு பூஜைகள் தீப ஆராதனைகள் நடைபெற்றது. விழாவில் முத்துவயல் ஊராட்சி முன்னாள் தலைவர் ரவி மற்றும் விழா குழுவினர் கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு ஸ்ரீ தர்ம முனிஸ்வரரை தரிசித்து சென்றனர். விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## தென்காசியில் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம்



தென்காசி, பிப்.12–

தமிழ்நாடு முதலமைச்சர் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து தென்காசி மாவட்டம் புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட தனியார் மண்டபத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் கமல்கிஷோர், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலைக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு தூய்மை பணியாளர்களுக்கு உணவுகளை பரிமாறி அவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்துள்ளார்கள். தூய்மைப் பணியாளர்களுக்கான உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் திங்கள் கிழமை காலை சிற்றுண்டியாக இட்லி, மெது வடை, சாம்பார் மற்றும் இரவு உணவாக இட்லி, கார சட்னி, சாம்பாரும், செவ்வாய்க் கிழமை காலை சிற்றுண்டியாக ரவா கிச்சடி, சாம்பார் மற்றும் இரவு உணவாக சப்பாத்தி, வெஜிடெபிள் குருமாவும், புதன் கிழமை காலை சிற்றுண்டியாக பொங்கல், சாம்பார் மற்றும் இரவு உணவாக ரவா கிச்சடி, சாம்பாரும், வியாழக்கிழமை காலை சிற்றுண்டியாக ரவா உப்புமா, தேங்காய் சட்னி மற்றும் இரவு உணவாக சப்பாத்தி, சென்னா மசாலாவும், வெள்ளிக் கிழமை காலை சிற்றுண்டியாக இட்லி, மெதுவடை, சாம்பார் மற்றும் இரவு உணவாக இட்லி, கார சட்னி, சாம்பாரும், சனிக்கிழமை காலை சிற்றுண்டியாக ரவா பொங்கல், சாம்பார் மற்றும் இரவு உணவாக ரவா உப்புமா, சட்னியும், ஞாயிற்றுக்கிழமை காலை சிற்றுண்டியாக சேமியா கிச்சடி, சாம்பார் மற்றும் இரவு உணவாக சப்பாத்தி, குருமாவும் தூய்மைப்பணியாளர்கள் ஆரோக்கியத்துடனும், சுகாதாரமாகவும் இருப்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கப்படுகிறது. புளியங்குடி நகராட்சியில் இத்திட்டத்தின் மூலம் 243 தூய்மைப் பணியாளர்கள் பயன்பெறுவார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், புளியங்குடி நகர்மன்ற தலைவர் விஜயா, ஆணையாளர் நாகராஜ் மற்றும் தூய்மைப்பணியாளர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், சத்தியமங்கலம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

## கோ.புதூர் அல் அமீன் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பாராட்டு



மதுரை, பிப்ரவரி. 12 -

மதுரை, கோ.புதூர் அல் அமீன் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற மாநில அளவிலான ஜூடோ மற்றும் வாள்சண்டை போட்டிகளில் வெற்றி பெற்று பள்ளிக்கும் மதுரை மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்கள் அமிர்தீன், யாசின், நபித் அஸ்லம், ஸ்டெய்ன்கமலேஷ் மற்றும் சிறப்பாக புத்தக மதிப்புரை செய்த மாணவர்கள் அப்துல் ரகுமான் மற்றும் ஷியாம் சுந்தர் ஆகியோர்களை மதுரை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எஸ்.தயாளன் வெகுவாக பாராட்டினார். அதன் தொடர்ச்சியாக இப்பள்ளியின் தலைமையாசிரியர் ஷேக்நபி மற்றும் உதவித் தலைமையாசிரியர் அல்ஹாஜ் முகமது ஆகியோரும் வாழ்த்து தெரிவித்தனர்.

## மதுரை மாநகர போக்குவரத்து காவல் துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து திலகர் திடல் போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி ஏற்பாட்டில் மூன்று நாள் கருத்தரங்கம்



மதுரை, பிப்ரவரி. 12-

மதுரை மாநகர போக்குவரத்து காவல் துறையின் சார்பில் சாலை பாதுகாப்புகள் குறித்து மூன்று நாட்கள் சிறப்பு செய்முறை வகுப்புகள் மற்றும் கருத்தரங்கு ரிசர்வ் லைன் பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படை ஆறாம் அணியின் கமாண்டென்ட். மதுக்குமாரி உத்தரவின் படி.. துணை கமாண்டென்ட் தாமஸ் மேற்பார்வையில் உதவி கமாண்டென்ட்.. மான் சிங் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு சிறப்பு காவல் படை 6 ம் அணியினை சார்ந்த காவல்துறையினருக்கு சாலை பாதுகாப்பு குறித்து 09.02.26 திங்கள் முதல் 11.02.26 புதன் வரை மூன்று நாட்கள் சிறப்பு வகுப்புகள், செய்முறை விளக்கங்கள் மற்றும் கருத்தரங்கு நடைபெற்றது.. இதில் சாலை பாதுகாப்புகள் குறித்தும் போக்குவரத்து விழிப்புணர்வு குறித்தும், விபத்தில்லாத பயணம் எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்தும் சாலை பாதுகாப்பில் காவலர்களின் பங்கு என்ன என்பது குறித்து பல்வேறு செயல்முறை விளக்கங்களுடன் மூன்று நாட்கள் சிறப்பு வகுப்பினை மதுரை மாநகர்,திலகர் திடல் போக்குவரத்து காவல் ஆய்வாளர் அ.தங்கமணி எடுத்துரைத்தார். இந்த மூன்று நாள் விழிப்புணர்வு கருத்தரங்கில் , காவல் துறை அதிகாரிகளும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து உறுதிமொழி மேற்கொண்டனர். இதில் த.சி.கா 6 ஆம் அணியின் சார்பாக 300 காவலர்களும் 50 காவல்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தலைமை ஏற்று கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழாவினை துவக்கி வைத்து உரையாற்றினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் வ.சங்கரநாராயணன், மாவட்ட திட்ட அலுவலர் விசுபாவதி ஆகியோர் உடன் உள்ளனர்.

## பொதுவிநியோக திட்டத்திற்கு தனி துறை கேட்டு நியாய விலை கடை பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்



திருவண்ணாமலை. பிப்.12-

பொதுவிநியோக திட்டத்திற்கென தனி துறை உருவாக்கிட கேட்டு நியாயவிலைக்கடை பணியாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு அரசு நியாயவிலைக் கடை பணியாளர்கள் சங்கம் சார்பில் திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட துணை தலைவர் ஆர்.அண்ணாமலை தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் இரா.சண்முகம், மாவட்ட துணை தலைவர் எம்.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகிக்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜி.மகாதேவன் அனைவரையும் வரவேற்றார். மாநில செயலாளர் ஏ.சி.சேகர் கண்டன உரையாற்றினார்.

பொதுவிநியோக திட்டத்திற்கென தனி துறை உருவாக்கிட வேண்டும்,அனைத்து நியாயவிலைக்கடைகளுக்கும் எடையாளர் நியமனம் செய்யப்பட வேண்டும், தாயுமானவர் திட்டத்திற்குள்ள பிரச்சனைகள் களையப்பட வேண்டும்,அனைத்து நியாய விலைக்கடைகளுக்கும் கழிப்பிட வசதி ஏற்படுத்தி தரவேண்டும், ஓய்வுபெற்ற நியாயவிலைக் கடை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கிட வேண்டும், நியாயவிலைக் கடை பணியாளர்களுக்கு நேரடியாக எழுத்தர் பதவி உயர்வு வழங்கிட வேண்டும், மகளிர் நியாயவிலைக்கடையை அரசே நடத்தி அப்பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கிட வேண்டும், சரியான எடையில் அத்தியாவசிய பொருட்கள் பொட்டலமாக வழங்கிட வேண்டும் என்பன உள்ளட்ட 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் 200க்கும் மேற்பட்ட நியாயவிலைக் கடை பணியாளர்கள் கலந்துகொண்டனர். முடிவில் மாவட்ட இணை செயலாளர் எஸ்.தனசேகர் நன்றி கூறினார்.

# தமிழகத்தில் 1100 சிறுபாலங்களை இந்த நான்கரை ஆண்டுகளில் கட்டி இருக்கிறோம்

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு பேட்டி!!



வேலூர், பிப்.12-

தமிழகத்தில் கிராம அணுகு சாலைகள் 95 சதவிகிதம் பணிகள் முடித்து 1100 சிறுபாலங்களை இந்த நான் கரை ஆண்டுகளில் கட்டி கொடுத்திருக்கிறோம் -11 ரயில்வே மேம்பாலங்களுக்கு நிதித்துறை நிதி ஒதுக்கீடு செய்யாததால் பணிகள் செய்ய முடியாத நிலையில் உள்ளோம் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ, வேலு பெருமுகையில் கூறினார்.

வேலூர்மாவட்டம்,பெருமுகையில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் 46 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நூற்றாண்டு தங்கும் விடுதி கட்டப்படுகிறது இந்த கட்டுமான பணிகள் தமிழக பொதுப்பணி மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் வேலு ஆய்வு செய்தார் உடன் மாவட்ட ஆட்சியர் சுப்பு லெட்சுமி,வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்

பின்னர் அமைச்சர் வேலு செய்தியாளர்களிடம் கூறுகையில் வெளிமாநில நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சுமார் 46 கோடியில் நவீன வசதிகளுடன் உணவகத்துடன் கூடிய தங்கும் விடுதி கட்டபடுகிறது இது பணிகள் முடிந்தால் வரும் 28 ஆம் தேதிக்குள் திறக்க வாய்ப்புள்ளது அதன் பின்னர் தான் இது எந்த துறையிடம் ஒப்படைப்பது என முதல்வர் முடிவு எடுப்பார் தமிழகத்தில் கிராம அனுகு சாலைகள் அமைப்பது 95 சதவிகிதம் நிறைவு பெற்றுள்ளது இன்னும் 5 சதவிகிதம் மட்டுமே பாக்கி உள்ளது கிராம அனுகு சாலைகள் தரமாக போடப்பட்டுள்ளது இந்த அனுகு சாலை மூலம் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட தரைபாலங்கள் ஓடைகள் சிறு நதிகளின் பாலங்கள் போன்றவைகள் எல்லாம் 1100 மேம்பாலங்களாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது இன்னும் 5 சதவிகிதம் பணிகள் செய்யபடவுள்ளது அதையும் செய்து முடிப்போம் மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வின் ரயில்வே திட்டங்களுக்கு தமிழக அரசு நிலம் கையகபடுத்தவில்லை என கூறுவது தேர்தலை மனதில் வைத்து சொல்கிறார் எங்கு எதை பார்த்தார் என தெரியவில்லை எங்கெங்கு என குறிப்பிட்டு மத்திய அமைச்சர் கூறினால் வருவாய்த்துறை மூலம் நிலங்களை கையகப்படுத்தி தர தமிழக அரசு தயாராக உள்ளது ரயில்வே மேம்பாலங்கள் 70 அமைக்க அறிவிப்பு வெளியிட்டு அதில் 11 மேம்பாலகளுக்கு நிதித்துறை நிதி ஒதுக்காததால் கிடப்பில் உள்ளது மீதமுள்ள எல்லா பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டு சர்வீஸ் சாலைக்கு நிலங்களை கையகப்படுத்தி திறப்பு விழாவும் செய்துவிட்டோம் வேலூர் மாவட்டத்தில் மேல்பட்டி,கூடநகரம் ஆகிய இரண்டு ரயில்வே மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழா செய்யப்பட்டு வேலூர் போக்குவரத்து நெரிசலை குறைக்க சன்பீம் முதல் அரப்பாக்கம் வரையில் சுற்றுசாலை ஒன்றும் அமைக்கப்படவுள்ளது வேலூரில் பறக்கும் சாலை அமைக்க சாத்தியமில்லை என கூறினார்

# விளாத்திகுளத்தில் தமிழக வெற்றி கழகத்திலிருந்து 500 பேர் முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜு முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர்!



விளாத்திகுளம் பிப்ரவரி 12–

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் தமிழக வெற்றி கழகத்தைச் சேர்ந்த பிரவீன் குமார் என்பவர் தலைமையில் 500க்கும் மேற்பட்ட தமிழக வெற்றி கழகத்தினர் முன்னாள் அமைச்சர் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கடம்பூர். செ. ராஜூ முன்னிலையில் தங்களை அதிமுகவில் இணைத்துக் கொண்டனர். அப்போது முன்னாள் அமைச்சர் கடம்பூர் செ. ராஜீ பேசுகையில், 2026 தேர்தல்களம் அதிமுகவின் வெற்றியை நோக்கி இருக்கிறது. த. வெ. கவில் இருந்து பிரிந்து தமிழகத்தின் நலன் கருதி அதிமுகவில் இணைந்துள்ளீர்கள் மழைக்காலத்தில் தோன்றும் வானவில் அழாக தெரியும் சூரிய ஒளிபட்டு கண்ணுக்கு தெரியமால் போய்விடும் வரும் தேர்தலில் வானவில்லும், சூரியனும் போய் விடும் வந்த வேகத்தில் மறையும் வானவில் போல் தமிழக வெற்றி கழகமும் மறையும். இன்றைக்கு திமுகவை தீய சக்தி அரசியல் எதிரி என்று கூறும் விஜய் கடந்த தேர்தலின் போது, என்ன கலர் சைக்கிளில் சென்று வாக்களித்தார் என்பது உங்களுக்கு தெரியும். அன்றைக்கு திமுக அரசியல் எதிரி என்று தெரியவில்லையா. நேரத்திற்கு நேரம் அரசியலில் கொள்கை மாற்றுபவர்கள் வெற்றி பெற முடியாது,

தமிழக வெற்றிக் கழகத்தின் மூன்றாமாண்டு தொடக்க விழாவில் விஜய் டான்ஸ் ஆடியது மூலமாக மீண்டும் டான்ஸ் தான் ஆடுவேன் என்பதை சொல்லமால் சொல்லியுள்ளார். வருகின்ற 28 ஆம் தேதி முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு புதூரில் நடைபெற உள்ள அதிமுக பொதுக்கூட்டத்தில், திமுக ,மதிமுக உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் அதிமுகவில் இணைய உள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றனர்.

வருகின்ற சட்டமன்றத்தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் சட்டமன்ற வேட்பாளரை படுதோல்வி அடைய செய்வோம், அதற்கான பணிகளை அதிமுகவினர் ஒன்றிணைந்து செய்து வருகிறோம் என்று பேசினார். இந்த முறை அதிமுக சார்பில் அடிப்படைத் தொண்டனை வேட்பாளராக நிறுத்தினாலும் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்வோம், மீண்டும் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியை அதிமுகவின் எஃகுக்கோட்டையாக மாற்றுவோம் என அதிமுக முக்கிய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சின்னப்பன்,மோகன் என்.கே.பெருமாள், ஒன்றிய செயலாளர்கள் ராமச்சந்திரன்,மகேஷ், பால்ராஜ், தனஞ்ஜெயன்,தனவதி,போடுசாமி நகர செயலாளர் மாரிமுத்து மாவட்ட தகவல் தொழில் நுட்பபிரிவு மோகன், தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆனந்த்,சுரேஷ், தங்கராஜ், கார்த்திக்ராம், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சத்யா,மகளிர் அணி சாந்தி,சிறுபான்மை பிரிவு சதீஷ்,அதிமுக நிர்வாகிகள் வரதராஜபெருமாள்,முனியசாமி,வேல்முருகன்,கண்ணன்,சண்முகசாமி,ஆசைத்தம்பி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்த திருப்பூர் மண்டல தலைவர் தம்பி கோவிந்தராஜ்!



திருப்பூர், பிப்ரவரி.12-

திருப்பூர் மாநகராட்சி 60வது வார்டுகளாக நான்கு மண்டலமாக செயல்பட்டு வருகிறது. மாநகராட்சி. நகராட்சி. மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள தூய்மை பணியாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் காலை உணவு திட்டத்தினை துவக்கி வைத்ததை தொடர்ந்து.

இரண்டாவது மண்டலம் மாநகராட்சியில் மண்டல தலைவர் தம்பி கோவிந்தராஜ். உதவி ஆணையாளர் பாரி ஜான். 19 வது வார்டு லதா கேபிள் மோகன். ஏழாவது வார்டு கவிதா விஜயகுமார். மூன்றாவது வார்டு லோகநாயகி கருப்புசாமி. ஏழாவது வார்டு வேலம்மாள் காந்தி. மாநகர நகராட்சி அதிகாரிகள். 400 தூய்மை பணியாளர்களுக்கு பொங்கல். இட்லி .கேசரி. அறுசுவை விருந்தினை காலை உணவாக வழங்கினர்.




# ராமநாதபுரத்தில் இண்டேன் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு!




ராமநாதபுரம், பிப்.12-

ராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் மூலம் விநியோகம் செய்யப்படும் இண்டேன் சமையல் எரிவாயு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சமையல் எரிவாயு பதிவு செய்து குறைந்தது பத்து நாட்களுக்கு பின்னர் தான் விநியோகம் செய்யும் நிலை நீடிக்கிறது.

தற்போது சமையல் எரிவாயு என்பது அனைத்து தரப்பினரும் பயன்படுத்தி வருகின்றனர். காஸ் பயன்பாடு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகும் மற்றும் சற்று ஆபத்தும் உள்ளது என்பதால் இயற்கை எரிவாயு மூலம் சமையல் எரிவாயு வீடுகள் தோறும் குழாய் மூலம் வினியோகம் செய்ய இராமநாதபுரம் மாவட்டத்தில் வேகமாக நடவடிக்கை எடுத்து வந்து பல்வேறு இடங்களில் பைப் லைன் பதிக்கப்பட்டு வந்தது. குழாய் மூலம் சமையல் எரிவாயு வீடுகள் தோறும் வினியோகம் செய்வதில் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை அத்துடன் அபாயம் ஏதும் இல்லாமல் மிகவும் பாதுகாப்பான முறையில் குழாய் மூலம் வினியோகம் செய்யப்பட்டு வரும் என்று விளக்கம் அளித்து பணிகள் வேகமாக நடைபெற்று வந்தது. அப்போது மக்கள் இண்டேன் போன்ற சமையல் எரிவாயு கிடைக்க தாமதம் ஏற்படுகிறது அத்துடன் பாதுகாப்பும் சற்று அச்சம் ஆக உள்ளது என்று இயற்கை எரிவாயு குழாய் மூலம் கிடைத்தால் மிகவும் மகிழ்ச்சி என்று ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தனர். அந்த நேரத்தில் இண்டேன் காஸ் தட்டுப்பாடு இல்லாமல் பதிவு செய்த மறுநாளே வினியோகம் செய்து பாதுகாப்பு குறித்து அவ்வப்போது போனில் வாடிக்கையாளர்கள் இடம் பேசியும் நேரில் வந்து பரிசோதனை செய்தும் வந்ததால் மக்கள் மீண்டும் இண்டேன் போன்ற எரிவாயு இணைப்பு பெறுவதில் அதிக ஆர்வம் காட்டி வந்தனர். அதற்கு இடையே இயற்கை எரிவாயு குழாய் மூலம் வினியோகம் செய்யும் திட்டம் ஏதோ ஒரு காரணத்தால் கிடப்பில் போடப்பட்டது. தற்போது வேறு வழியின்றி இண்டேன் போன்ற எரிவாயு தான் மக்கள் பயன் படுத்தி ஆக வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டது. இந்நிலையில் தற்போது மீண்டும் காஸ் தட்டுப்பாடு சத்தமின்றி ஏற்பட்டு மக்கள் சமையல் எரிவாயு உடனடியாக கிடைக்காமல் அலைமோதும் அவலநிலையை உருவாக்கி விட்டனர். சமையல் எரிவாயு தட்டுபாடு தற்போது ராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகரித்து பெண்கள் காஸ் ஏஜன்சி அலுவலகத்திற்கு அலைந்து கொண்டு இருக்கின்றனர்.

இதுகுறித்து ராமநாதபுரம் இண்டேன் காஸ் வினியோகம் செய்யும் ஏஜன்சியில் உள்ள அலுவலர் கூறியதாவது, " தற்போது சமையல் எரிவாயு சப்ளை எங்களுக்கே கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. முன்பெல்லாம் ஒரு நாளைக்கு 5 அல்லது 6 லோடு சிலிண்டர் இளையான்குடி மற்றும் திருநெல்வேலியில் இருந்து வரும். தற்போது ஒரு நாளைக்கு ஒரு லோடு கிடைப்பதே அரிதாக உள்ளது. இதனால் வாடிக்கையாளர்கள் பதிவு செய்து 10 நாட்களுக்கு பின்னர் தான் வினியோகம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம்" என்று கூறினார்.

ஆன் லைன் புக்கிங் என்று கூறி பதிவு செய்தால் அதில் காஸ் வினியோகம் செய்ய இன் வாய்ஸ் ஜெனரேட்டடு என்று வாடிக்கையாளர்களுக்கு எஸ்எம்எஸ் வந்து நான்கு நாட்கள் பின்னர் தான் வினியோகம் செய்யும் நிலை உருவாகி உள்ளது. இதுகுறித்து மக்கள் எங்கு யாரிடம் புகார் செய்வது என்று தெரியாமல் திணறி வருகின்றனர். சமையல் எரிவாயு தட்டுபாடு திடீரென உருவாக காரணம் என்ன என்பது புரியாத புதிராக உள்ளது. இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் மக்கள் இயற்கை எரிவாயு திட்டம் வேண்டும் என்று ஒட்டுமொத்த குரல் எழுப்பி விடும் சூழல் உருவாகும்.

# மலம்பட்டி ஊராட்சியில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி



சிவகங்கை, பிப்.12-

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மலம்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இப்புகைப்படக் கண்காட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் இடம் பெற்றன. மேலும், இக்கண்காட்சியில் அரசு திட்டங்கள் குறித்தும், நலத்திட்டங்களை


எவ்வாறு பெறுவது, யாரை அணுகி பெறவேண்டும் என்பது குறித்தும் பொதுமக்களுக்கு அலுவலர்களால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் தமிழக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ளவும், நலத்திட்ட உதவிகளை யாரை அணுகிப் பெறவேண்டும் என்பது குறித்து அறிந்து கொள்வதற்கும் வசதியாக இப்புகைப்படக் கண்காட்சி பெரிதும் உதவியாக இருந்தது என பொதுமக்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்று, பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் அரசின் சார்பில் நடத்தப்படும் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பார்த்து, அரசின் திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு பயன்பெற வேண்டும்.

# ஓ... அப்படியா?

## சசிகலாவும், ஓ.பி.எஸ்சும் அதிமுகவுக்கு பாதகம் ஏற்படுத்த மாட்டார்கள் என்று தினகரன் தெரிவித்த கருத்துக்கு ஓ.பி.எஸ். கொடுத்த ரியாக்ஷன்!!



கிருஷ்ணகிரி, பிப்.12-

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் நடைப்பெற்ற திருமணவிழாவில் கலந்துக் கொண்ட முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், சசிகலாவும், ஓ.பி.எஸ்சும் அதிமுகவுக்கு பாதகம் ஏற்படுத்த மாட்டார்கள் என்று தினகரன் தெரிவித்த கருத்துக்கு ஓ அப்படியா என புன்னகை செய்தவாறு பதில் அளிக்காமல் சென்றார்.

கிருஷ்ணகிரி மாவடடம் பர்கூரில் ஓ.பி.எஸ் ஆதரவாளரான முன்னாள் எம்.எல்.ஏ கோவிந்தராஜ் இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முன்னாள் முதல்வர் ஓ.பண்ணீர்செல்வம் மணமக்களை வாழ்த்தினார். மேலும் இதேபோல முன்னாள் அமைச்சருமான பழனியப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மணமக்களை . வாழ்த்தினார்கள்.

பின்னர் செய்தியாளர்கள் ஓ.பண்ணீர்செல்வம் இடம் பல்வேறு கேள்விகளை முன்வைத்தனர். அதில் சசிகலாவும், ஓ.பண்ணீர்செல்வமும் அதிமுகவுக்கு பாதகம் ஏற்படுத்தமாட்டர்கள் என தினகரன் கருத்து தெரிவித்து உள்ளது குறித்து கேள்வி எழுப்பினர். அதற்க்கு ஓ அப்படியா என புன்னகை செய்த ஓ.பி.எஸ் பதில் அளிக்க மறுப்பு தெரிவித்து விட்டார். இந்த மாத இறுதிக்குள் கூட்டணி குறித்து தெரியவரும் என கூறினார்.

# இண்டர்நேசனல் சிலம்பம் மற்றும் ஸ்போர்ட்ஸ் ரிசர்ச் அசோசியேசன் துவக்க விழா




கோவை, பிப்.12-

கோவை ரயில் நிலையம் அருகே உள்ள தனியார் அரங்கில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக சிலம்பம் பயிற்சி அளித்து வரும் சங்கமானது இன்று புதிதாக இண்டர்நேசனல் சிலம்பம் மற்றும் ஸ்போர்ட்ஸ் ரிசர்ச் அசோசியேசன் துவக்க விழா நடைப்பெற்றது.மேலும் தலைவர் ஞானசேகரன் மற்றும் சிறப்பு விருந்தினராக மாநில தகவல் ஆணையாளர் இளம்பருதி,காவல் துறை உதவி ஆணையாளர் செல்லத்துரை ,துணை ஆட்சியர் நிறைமதி,தொழிலதிபர்

கோல்டன் கோபிநாத்,கப்பல் அப்பாஸ்,புத்தூர் நடராஜ் ஆகியோர் குத்து விளக்கேற்றி விழாவை துவக்கி வைத்தனர். மேலும் புதிய சங்கத்தில் பொறுப்பு வகித்த அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கி சிறப்பித்தனர். மேலும் சிலம்ப கலை அழியாமல் பாரம்பரியதோடு இருக்கவே இண்டர்நேசனல் சிலம்பம் மற்றும் ஸ்போர்ட்ஸ் ரிசர்ச் அசோசியேசனை துவக்கியதும்.

அதே போல் பழைய பாட முறைகளை இந்த தலைமுறைக்கு கற்று கொடுப்பதும் மற்றும் அந்த காலகட்டத்தில் எந்த எந்த மாதிரியான ஆயுதங்களை பயிற்சி செய்தனர் என்பதை ஆராய்ச்சி செய்தும் அதனை இக்காலத்திற்கு ஏற்றவாறு புதுமையான முறையில் கொண்டு வருவதே நோக்கமாகும் தமிழகத்தில் சிலம்பத்தில் 30,40 வருடங்கள் அனுபவம் வாய்ந்த 160 க்கும் மேற்பட்ட ஆசன்களை 22 மாவட்டத்திலிருந்து வரவழைத்து இன்டர்நேஷனல் சிலம்பம் மற்றும் ஸ்போர்ட்ஸ் ரிசர்ச் அசோசியேசன் சார்பாக விழாவிற்கு வருகை புரிந்த அவர்களுக்கு நல்ல ஒரு வாழ்க்கை அமைவதற்கும்,அதே போல் இங்கு வந்த சிலம்பம் பயிற்சி பெறும் மாணவ,மாணவிகளுக்கும் நல்லத்தோரு எதிர்காலம் அமைத்து கொடுப்பதற்காகவே இண்டர்நேசனல் சிலம்பம் மற்றும ஸ்போர்ட்ஸ் ரிசர்ச் அசோசியேசன் துவங்கியது.

அரசு விதிகள் முறைப்படி பயிற்சி அளித்து அவர்களை வரும் காலத்தில் அரசு உயர் அதிகாரிகளாக உருவாக்குவதே இந்த அசோசியேசனின் லட்சியம் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் செயலாளர் பிரபு மற்றும் ரெஃப்ரி சேர்மன் தனபால் தலைமை ஆசன்கள் மாரிமுத்து,குமார்,ராமன்,நாகராஜ் போன்றோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.




கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை சார்பாக நடைபெற்ற தேசிய குடற்புழு நீக்க முகாமில், தேசிய குடற்புழு நீக்க நாள் உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் ,, பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் .தே.மதியழகன் ஆகியோர் தலைமையில் சுகாதார பணியாளர்கள், மாணவிகள் எடுத்துக்கொண்டனர். உடன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ரமேஷ் குமார், வட்டார மருத்துவ அலுவலர் மரு.இனியள் மண்டோதரி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம் பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம் கணேசன் தொடங்கி வைத்தார்




திருவெண்ணெய்நல்லூர், பிப்.12-

தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் தூய்மை பணியாளர்களுக்கான காலை உணவு திட்டத்தை சென்னையில் தொடங்கி வைத்தார்.

இதையொட்டி திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சி அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் பொன்முடி எம்.எல்.ஏ., ஆணைக்கிணங்க பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம் கணேசன் கலந்து கொண்டு பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்து தூய்மை பணியாளர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். அப்போது காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்த தமிழக முதலமைச்சர் ஸ்டாலினுக்கு தூய்மை பணியாளர்கள் நன்றி தெரிவித்தனர். இதில் நகர செயலாளர் பூக்கடை கணேசன், இளநிலை உதவியாளர் பாலமுருகன், பேரூராட்சி கவுன்சிலர் செந்தில் முருகன் மற்றும் அலுவலக ஊழியர்கள், தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!




இணைய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, சிங்கம்புணரி வட்டத்திற்குட்பட்ட RM.RM. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இணைய பாதுகாப்பு நாள் விழா (Safer Internet Day Celebrations) சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது.

# களியக்காவிளை அரசு முஸ்லிம் பள்ளியில் மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை!



களியக்காவிளை, பிப். 12-

களியக்காவிளை அரசு முஸ்லிம் தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சையை உறுதி செய்திடும் வகையில் அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு வருகிறது. இந்த வகையில் இப் பள்ளி மாணவர்களுக்கு உடல் வளர்ச்சி, கண்பார்வை, பற்கள் மற்றும் பொது ஆரோக்கியம் குறித்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இப் பரிசோதனை முகாமுக்கு பள்ளி தலைமையாசிரியை ரஜினி தலைமை வகித்தார். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மாகீன் அபுபக்கர் முன்னிலை வகித்தார். மேல்புறம் வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலைய தேசிய குழந்தைகள் நலத்திட்ட மருத்துவர் பிரியா மற்றும் பகுதி சுகாதார செவிலியர் தேன்மொழி, மருந்தாளுநர்கள் ஆல்பின் பால், லதா செல்வகுமாரி ஆகியோர் அடங்கிய மருத்துவக் குழுவினர் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டனர்.

இதில் பள்ளி ஆசிரியைகள லேகா, பினி சந்திரா, பள்ளி கிராம கல்விக் குழு தலைவர் சுரேஷ்குமார், களியக்காவிளை பேரூராட்சி வார்டு உறுப்பினர் றியாய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திக்குறிச்சி மஹா தேவர் கோயில் செல்லும் சாலை இண்டர் லாக் அமைக்கும் பணிகள் துவங்கியது



மார்த்தாண்டம், பிப்.12-

குமரி மாவட்டத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்கும் மஹா சிவாலய ஓட்டம் 14,15,16 தேதிகளில் நடைபெற உள்ளது. 2 வது சிவாலயமான ரிஷப ராசி பரிகார ஸ்தலமான திக்குறிச்சி மஹா தேவர் கோயில் செல்லும் சாலை கடந்த 18 ஆண்டுகளாக செப்பனிட படாமல் குண்டும் குழியுமாக காட்சியளித்த தை தொடர்ந்து பக்தர்கள் பலமுறை சாலையை செப்பனிட கோரி மனு கொடுத்தும் பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் விஷ்வ ஹிந்து பரிஷத் சார்பில் 15 தினங்களுக்கு முன்பு 18 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட கல் வெட்டிற்கு அஞ்சலி செலுத்தி கோசாலை பசுமாட்டிற்கும் தாமிரபரணி ஆற்றிற்கும் மனு கொடுத்து நூதன போராட்டம் நடைபெற்றது.

இந்த நேற்று முன்தினம் சட்டமன்ற உறுப்பினர் தாரகை கத்பட் கோயிலுக்கு ஆய்வுக்கு வந்து அதிகாரிகளுக்கு உடனே பணிகளை துவங்க அழுத்தம் கொடுத்தார். இது போன்று அதே நேரத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் பாஜக விளவங்கோடு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான விஜய தரணி கோயிலுக்கு ஆய்வுக்கு வந்தார். அவரும் சாலை செப்பனிடாத காரணத்திற்கு கண்டனம் தெரிவித்து போராட்டம் நடத்த போவதாக அறிவித்தார். இந்த நிலையில் பாகோடு பேரூராட்சி நிர்வாகம் நேற்று கோயிலுக்கு செல்லும் நுழைவு வாயில் இருந்து கோயிலுக்கு செல்லும் சாலை இண்டர் லாக் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

# குமரியில் சிவாலய ஓட்டம் பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறப்பாக செய்ய எஸ்பி ஸ்டாலின் வலியுறுத்தல்!




நாகர்கோவில், பிப்.12-

கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை மாதாந்திர குற்ற கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆயுதப்படையில் வைத்து நடைபெற்றது. மாவட்ட கண்காணிப்பாளர் ஸ்டாலின் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் சரித்திர பதிவேடு குற்றவாளிகளை கண்காணித்து நன்னடத்தை பிணை பெறுவதை உறுதி செய்ய வேண்டும், விபத்து ஏற்படுவதை தடுக்க வாகன சோதனையை அதிகப்படுத்தி போக்குவரத்து விதிமீறலில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்,

காய வழக்குகளை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவை குறித்து அறிவுறுத்தப்பட்டது. குறிப்பாக சிவாலய ஓட்ட விழா பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறப்பான முறையில் செய்தல் என பல்வேறு அறிவுறுத்தல்களை மாவட்ட எஸ்பி வழங்கினார்.

மேலும் ஜனவரி மாதத்தில், விரைவான குற்றப் பத்திரிகை தாக்கல், குற்றவாளிகளை கைது செய்தல், சரித்திர பதிவேடு குற்றவாளிகளின் மீதான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருதல் என ஒட்டுமொத்தமாக சிறப்பாக செயல்பட்ட காவல் நிலையமாக கோட்டார் காவல் நிலையம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கேடயம் வழங்கினார். அதனை நாகர்கோவில் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் சிவசங்கரன் மற்றும் கோட்டார் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சண்முக கார்த்திகேயன், ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இந்த கூட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், அனைத்து உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர்கள், அனைத்து காவல் நிலைய ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், மேலும் மருத்துவத்துறை, குழந்தைகள் நல அலுவலர், அரசு குற்ற வழக்கறிஞர்கள் உட்பட அனைத்துத்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.




# "ஓடு, தானம் செய், மீண்டும் வாழ்வு கொடு" கிம்ஸ் ஹெல்த் மாரத்தான் 2026 சீசன் 2 வரும் 22-ம் தேதி நடக்கிறது



நாகர்கோயில், பிப். 12-

கன்னியாகுமரி மாவட்டத்தின் முன்னணி மூன்றாம் நிலை சிகிச்சை மருத்துவமனையாக விளங்கும் கிம்ஸ் ஹெல்த் மருத்துவமனை சார்பில் நாகர்கோவில் வரும் பிப்ரவரி 22, அன்று கிம்ஸ் ஹெல்த் மாரத்தான் 2026 - சீசன் 2 நடைபெற உள்ளது. இது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், நாகர்கோயில் கிம்ஸ் ஹெல்த் மருத்துவமனையில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.

செய்தியாளர் சந்திப்பில் பேசிய கிம்ஸ் ஹெல்த் குழுமம் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர், டாக்டர் எம். ஐ. சஹதுல்லா, "கிம்ஸ் ஹெல்த் மாரத்தான் 2026 - சீசன் 2 இன் மைய கருத்து உறுப்பு தானத்தின் அவசியத்தை பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பதாகும். உறுப்பு மாற்று சிகிச்சைக்கு தேவை அதிகரித்து வரும் நிலையில், தானம் செய்பவர்கள் குறைவாக இருப்பது பெரும் சவாலாக உள்ளது. இந்த மாரத்தான் மூலம், ஒருவரின் உறுப்பு தானம் பல உயிர்களை காப்பாற்ற முடியும் என்பதையும், உறுப்பு தான கலாச்சாரத்தை சமூகத்தில் உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம்" என்றார்.

மேலும், இந்த மாரத்தான் கன்னியாகுமரி மாவட்டம் மட்டுமின்றி தென் தமிழகத்திலேயே மிகப் பெரிய விளையாட்டு மற்றும் சுகாதார விழிப்புணர்வு நிகழ்வுகளில் ஒன்றாக அமையும் என்றும், சமூக பொறுப்புணர்வையும் மக்களின் பெரும் பங்கேற்பையும் வெளிப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய ரேஸ் டைரக்டர் மற்றும் ஆலோசகர் - குடல்வயிறு அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ரெஜீஷ் செல்வகணேசன் கூறுகையில்

இந்த மாரத்தான் ஒரு போட்டி மட்டுமல்ல, உயிர்களை காப்பாற்றும் ஒரு இயக்கம் என்றும், ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும் முயற்சி என்றும் குறிப்பிட்டார்.

"ஓடு, தானம் செய், மீண்டும் வாழ்வு கொடு" என்ற வாசகத்தை மையமாகக் கொண்டு, உடல் ஆரோக்கியத்தை ஊக்குவிப்பதோடு உறுப்பு தானத்தின் முக்கியத்துவம் குறித்து சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த மாரத்தானின் முக்கிய நோக்கமாகும்.

இந்த மாரத்தான் கிம்ஸ் ஹெல்த் நாகர்கோவில் மருத்துவமனை வாகன நிறுத்துமிடத்திலிருந்து தொடங்கி, நான்கு வழிச்சாலை பைபாஸ் வழியாக சென்று, மீண்டும் மருத்துவமனை வளாகத்திலேயே நிறைவடையும்.

இந்த ஆண்டுக்கான மாரத்தானுக்கு 1,100-க்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதால், அதிகாரப்பூர்வ முடிவு தேதிக்கு முன்பே பதிவு நிறுத்தப்பட்டுள்ளது. இதில் 300 பெண்கள் பங்கேற்பது, பெண்களின் விளையாட்டு பங்கேற்பை ஊக்குவிக்கும் முக்கிய சாதனையாகக் கருதப்படுகிறது.

மாரத்தான் பிரிவுகள்:

5 கி.மீ.-பொழுதுபோக்கு ஓட்டம் (Fun Run)

10 கி. மீ. ஓட்டம்

அரை மாரத்தான் - 21 கி.மீ.

இந்த மாரத்தான் சர்வதேச தரநிலைகளுக்கு இணங்க, பங்கேற்பாளர்களின் பாதுகாப்பு, தொழில்முறை ஓட்ட மேலாண்மை மற்றும் முழுமையான மருத்துவ உதவிகளுடன் சிறப்பாக நடத்தப்பட உள்ளது

இந்த செய்தியாளர் சந்திப்பில் டாக்டர் தாணு - மருத்துவ கண்காணிப்பாளர், கிம்ஸ் ஹெல்த் நாகர்கோவில், திரு. கிரிபேஷ் ஹரிஹரன் - CHRO & CEO (SBUs) மற்றும் தலைமைத் செயல்திட்ட அதிகாரி கிம்ஸ் ஹெல்த் குழுமம், திரு. கிரண் - குழும மனிதவளத் தலைவர், Quality Care India Ltd., டாக்டர் தீபக்-பிராந்திய மருத்துவ இயக்குனர், கிம்ஸ் ஹெல்த் குழுமம், நவீன்- செயல்திட்ட அதிகாரி, QCI மற்றும் பல மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# புரட்சி விடுதலை சிறுத்தைகள் கட்சி உதயம் சென்னையில் அறிமுக விழா



நாகர்கோவில், பிப்.12-

கன்னியாகுமரி மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சி நாகர்கோவில் மாநகராட்சி மாவட்ட செயலாளராக செயல்பட்டவர் அல்காலித். இவர் அந்த கட்சியில் இருந்து இப்போது வெளியே வந்து புரட்சி விடுதலை சிறுத்தை கட்சி என்ற கட்சியை துவங்கியுள்ளார். விரைவில் சென்னையில் வைத்து கட்சியின் அறிமுக விழா கூட்டம் நடைபெறும்.

தமிழக முழுவதும் அனைத்து மாவட்டங்களுக்கும் மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளுக்கும் மாநில பொறுப்புகளுக்கும், பொறுப்பாளர்கள் அறிவிக்கப்பட உள்ளார்கள். என்ற தகவலை கட்சியின் நிறுவனத் தலைவர் அல்காலித் தெரிவித்தார்.

# கன்னியாகுமரியில் கடைகளை இடிக்க எதிர்ப்பு தெரிவித்து வியாபாரிகள் கடையடைப்பு போராட்டம்



கன்னியாகுமரி,பிப்.12-

கன்னியாகுமரி ரதவீதியில் பகவதி அம்மன் கோவிலுக்கு சொந்தமான கன் னியம் பலம் என்ற கல் மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்தின் உள் பகுதியில் வலம்புரி விநாயகர் கோயில் அமைந்துள்ளது. இந்த கன்னியம்பலம் 4 பக்கமும் திறந்த வெளியாக காணப்படும். இதனால் பகவதி அம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளும் கன்னியம்பலத்துக்கு சென்று இளைப்பாறி வந்தனர்.

காலப்போக்கில் வியாபார நோக்கில் கன்னியம்பலத்தை சுற்றி ஏராளமான கடைகள் அமைக்கப்பட்டன. இதனால் கன்னியம்பலத்தின் 3 பக்கங்களும் அடைக்கப்பட்டு,அதனை சுற்றி ஏராளமான கடைகள் அமைக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்று வந்தது. இதனால்

பக்தர்களுக்கு பயன்பட்டு வந்த கன்னியம்பலம் மூடப்பட்டது. இந்த நிலையில் பழமை வாய்ந்த கன்னியம்பலம், மண்டபத்தை பாதுகாக்க வேண்டியும் புராதனமான இந்த மண்டபத்தை வியாபார ஸ்தலமாக மாற்றக்கூடாது என்றும் இந்த மண்டபத்தில் இருக்கின்ற அனைத்து கடைகளையும் அகற்ற வேண்டும் என்றும் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கன்னியம்பலம் மண்டபத்தில் உள்ள கடை களை இடித்து அகற்ற வேண்டும் என்று உத்தர விட்டார். இதை தொடர்ந்து

கடந்த மாதம் மண்டபத்தை மறைத்து கட்டப்பட்ட ஒரு ஓட்டல் மற்றும் கடை கன்னியாகுமரி நகராட்சி மூலம் இடித்து அகற்றப்பட்டது. இதற்கான அத்தாட்சிகள்' மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இருப்பினும் மண்டபத்தில் உள்ள மற்ற 12 கடைகளையும் அகற்ற வேண்டும் என்று மதுரை உயர்நீதிமன்றம் அறநிலையத்துறைக்கு அறிவுரை வழங்கியது. இதைத் தொடர்ந்து கன்னியம்பலம் மண்டபத்தில் உள்ள 12 கடைகளையும் அகற்ற வேண்டும் என்று அறநிலையத்துறை நிர்வாகம் சார்பில் வியாபாரிகளுக்கு அறிவுரை வழங்கியது. நகராட்சியின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு இதை கருத்தில் கொண்டு மாற்று இடம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கன்னியாகுமரியில் அனைத்து வியாபாரிகள் சங்கம் சார்பில் முழு கடையடைப்பு போராட்டம் நடந்தது.

கன்னியாகுமரி இந்து அறநிலையத்துறை இணை ஆணையர் ஜான்சிராணி, பகவதி அம்மன் கோவில் மேலாளர் ஆனந்த் மற்றும் ஊழியர்கள் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் கடைகளை அகற்றவும், கடைகளுக்கு சீல் வைக்கவும் முற்பட்டனர். இதனைத்தொடர்ந்து வியாபாரிகள் திரண்டு கன்னியம்பலம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் கடைகளுக்குள் இருந்தவாறு சீல் வைக்க முடியாதபடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் சுற்றுலா தலமான கன்னியாகுமரி பரபரப்பாக காணப்படுகிறது. சன்னதி தெருவில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

கடையடைப்பின் காரணமாக கன்னியாகுமரி சன்னதி தெரு, பார்க்வியூ பஜார், காந்தி மண்டப பஜார், விவேகானந்தா ராக் ரோடு, மெயின் ரோடு, ரத வீதி உள்பட்ட பகுதிகளில் அனைத்து கடைகள் அடைக்கப்பட்டு வெறிச்சோடி காணப்படுகிறது.




கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தொழிலாளர் நலத்துறை (சமூக பாதுகாப்பு திட்டம்) சார்பாக, 11 பயனாளிகளுக்கு ரூ.6 இலட்சத்து 36 ஆயிரத்து 200 மதிப்பில் விபத்து மரணம், திருமணம், ஓய்வூதியம், கல்வி மற்றும் இயற்கை மரண உதவித்தொகைக்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் , வழங்கினார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது .கோபு, தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் .அபிநயா, துணை ஆட்சியர் பயிற்சி செல்வி. க்ரிதி காம்னா , தொழிலாளர்நலத்துறை உதவி ஆணையர்கள் .ராஜசேகர் அமலாக்கம் .ஆர். மாதேஸ்வரன் சமூகபாதுகாப்பு உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# அணைக்கட்டில் முன்னாள் முப்படை வீரர்கள் நலச்சங்க நான்காம் ஆண்டு பொதுக்குழு



வேலூர், பிப்.12-

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு வட்டார முன்னாள் முப்படை வீரர்கள் நலச்சங்கத்தின் நான்காம் ஆண்டு பொதுக்குழு கூட்டம் அணைக்கட்டில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு சங்கத்தின் தலைவர் ஏ.டி.வேலாயுதம் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் கே.சிவகுமார் செயலாளர் வரதராஜன், பொருளாளர் ஜெயச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக கர்னல் கங்காதரன் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

இதில் சட்ட ஆலோசகர் சரவணகுமார், சங்க ஆலோசகர் தங்கவேல் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். பொதுக்குழுவில் அணைக்கட்டு தாலூக்காவிற்கு CSD கேன்டின் மற்றும் ECHS வசதி வேண்டும். வேலூர் மாவட்டத்தில் உள்ள முன்னாள் முப்படை வீரர்கள், வீர மங்கையர்கள் அவர்கள் குடும்பத்தை சார்ந்தவர்களுக்கு சிகிச்சை பெற சிஎம்சி, நாராயணி,மற்றும் நருவி மருத்துவமனையில் அனுமதி வழங்க வேண்டும். ஜவான் பவன் புனரமைக்க வேண்டும். வேலூர் மாவட்டத்தில் கேந்திரிய வித்யாலயா பள்ளி துவங்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!




சிவகங்கை மாவட்டம், இணைய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, சிங்கம்புணரி வட்டத்திற்குட்பட்ட ஆர்.எம்.ஆர்.எம். அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற இணைய பாதுகாப்பு நாள் விழாவில் (பாதுகாப்பான இணைய நாள் கொண்டாட்டங்கள்) மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, மாணாக்கர்களிடையே இணைய பாதுகாப்பு குறித்து, விழிப்புணர்வு உரையாற்றினார். உடன் மாவட்ட தகவலியல் அலுவலர் (தேசிய தகவல் மையம் (ழிமிசி)) ராஜகுரு, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி, மாவட்ட கல்வி அலுவலர் மாரிமுத்து மற்றும் பள்ளி தலைமையாசிரியர்கள் முருகன், கலாநிதி, பள்ளி ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.